Registered as a News Paper          பக்கங்கள் 06          விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM          Peoples Daily          மக்கள் தினசரி

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     மாசி 13     [24 - 02 - 1993]     புதன்கிழமை     ஓசை 06

## வெளிநாட்டு பிரதிநிதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணத்தில் முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக "குமாரி" கப்பலில் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த நான்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் கப்பலில் வைத்து திருப்பி அனுப்பியுள்ளது. போரூட் நிறுவனம், கெயர் நிறுவனம், ரெட்பானா நிறுவனம், சிறுவர் பராமரிப்பு நிதியம் போன்ற அமைப்புக்களைச்சார்ந்த அந்த நாட்டுப் பிரதிநிதிகளும்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாதகல் கரையோரம் கடும் சண்டை

# இழப்புடன் ராணுவம் பின்வாங்கியது

[யாழ்ப்பாணம்]

மாதகல் இராணுவ முகாமிலிருந்து கடற்கரைவீதி ஓரமாக முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேற்று கடும் சண்டை மூண்டது. காலை 5·45 மணியளவில் ஆரம்பித்த இம்மோதல் பிற்பகல் 12.30 மணி வரை நீடித்தது கவச வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும், கடற்படை பீரங்கிப் படகுகளும் உதவியாகத் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலின்போது யாழ். குடாநாட்டில் புக்காரா விமானம் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் கடற்கரை வீதியூடாக முன்னேறிய இராணுவத்தினர் சுமார் 2 கிலோ மீற்றர் வரை முன்னேறி திருவடி நிலையை அடைந்தனர். இதே வேளை வெளியேறி வந்த இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு சியாமாச்செட்டி குண்டு வீச்சு விமானங்களும், ஒரு புக்காரா விமானமும், இரண்டு ஹெலிகொப்டர்களும் தாக்குதல் நடத்தின. இதேவேளை கடலில் தரித்து நின்ற இரண்டு பீரங்கிப் படகுகளும் தாக்குதல்களை நடத்தின.

இந்நிலையிலும் திருவடி நிலையில் வைத்து விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது பலத்த மோட்டார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அகோர பீரங்கி தாக்கு; பலத்த குண்டு வீச்சு

மாதகல் முகாமிலிருந்து வெளியேறிய படையினருக்கு உதவியாக மாதகல், திருவடி நிலை கடற்பரப்பிலிருந்து சிறிலங்கா கடற்படையினர் பாரிய பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர். இக்குண்டுகள் திருவடிநிலை, சுளிபுரம், பறளாய், காட்டுப்புலம் பகுதி

இதேவேளை விமானப்படையின் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகளில் மத்திய வரையான குண்டுகளை வீசின. இவற்றின்மத்தியில் உலங்குவானூர்தி ஒன்று வீதிகளைமையமாகக்கொண்டு தொடர்ச்சியான சுவிபர்த்தாக்குதல்களை நடாத்திய வண்ண

மணியளவில் மூளாய், சித்தன்கேணி, சுளிபுரம் தொல்புரம், பண்டத்தரிப்பு பகுதிகளை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் திருவடி நிலை பகுதியில் அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. இதன்

## இராணுவ நடவடிக்கையால் 5000 பேர் வெளியேற்றம்

(நமது நிருபர்)

சிறிலங்கா முப்படைகளின தும் அகோர தாக்குதல்களுக்கு அஞ்சி வலி மேற்கு பகுதிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துபாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சிறிலங்காப்படையினரின் இத்தாக்குதல்களுக்கு அஞ்சி சுளிபுரம், நாத்தடைடி, குடாக்கனை, கல்லடி வேம்பு, பண்ணாகம், பறளாய், கம்பனை, தலையாட்டி பகுதிகளிலிருந்து 5000 இற்கு மேற்பட்ட மக்கள் வெளியேறி அகதிகளாக தொல்புரம், மூட்டுச்சந்தையடி, மத்தியசனசமூக நிலையக் கட்டடம், துரையன்வளவு, பிள்ளையார் கோவிலடி, பத்தானைக் கேணியடி, வட்டுக்கோட்டை, வழக்கம்பரை அம்மன் கோவிலடி பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

### செஞ்சிலுவை உதவி:

சிறிலங்கா படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி மக்கள் சிதறி ஓடிய போது பலர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இவ்வாறு காயமடைந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் எறிகணை வீச்சு ஒரு பெண் பலி; ஒருவர் காயம்

### 500 குடும்பங்கள் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் குளமங்கால் பகுதியில் நேற்று இரவு இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலினால் ஒரு பெண் மரணமானார். மற்றொருவர் காயம் அடைந்தார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் இப்பகுதியை நோக்கி சுமார் 15 எறிகணைகள் ஏவப்பட்டதாகவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் எறிகணை வீச்சு இடம் பெற்றுக் கொண்டிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊர

## 440 மைல் தூரத்தில் வைத்து கிட்டு வந்தகப்பல்பிடிபட்டது

(சென்னை)

காப்பு அமைச்சகம் தெரிவித்

(யாழ்ப்பாணம்)

மாதகல் இராணுவ முகாமிலிருந்து கடற்கரைவீதி ஓரமாக முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேற்று கடும் சண்டை மூண்டது. காலை 5.45 மணியளவில் ஆரம்பித்த இம்மோதல் பிற்பகல் 12.30 மணி வரை நீடித்தது. கவச வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும், கடற்படை பீரங்கிப் படகுகளும் உதவியாகத் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலின்போது யாழ். குடாநாட்டில் புக்காரா விமானம் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் கடற்கரை வீதியூடாக முன்னேறிய இராணுவத்தினர் சுமார் 2 கிலோ மீற்றர் வரை முன்னேறி திருவடிநிலையை அடைந்தனர். இதே வேளை வெளியேறி வந்த இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு சியாமாச்செட்டி குண்டு வீச்சு விமானங்களும், ஒரு புக்காரா விமானமும், இரண்டு ஹெலிகொப்டர்களும் தாக்குதல் நடத்தின. இதேவேளை கடலில் தரித்து நின்ற இரண்டு பீரங்கிப் படகுகளும் தாக்குதல்களை நடத்தின.

இந்நிலையிலும் திருவடிநிலையில் வைத்து விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது பலத்த மோட்டார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அகோர பீரங்கி தாக்கு; பலத்த குண்டு வீச்சு

மாதகல் முகாமிலிருந்து வெளியேறிய படையினருக்கு உதவியாக மாதகல், திருவடிநிலை கடற்பரப்பிலிருந்து சிறிலங்கா கடற்படையினர் பாரிய பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர். இக்குண்டுகள் திருவடிநிலை, சுளிபுரம், பறளாய், காட்டுப்புலம் பகுதிகளிலும் கரையோரப் பகுதிகளிலும் வீழ்ந்துவெடித்தன.

இப்பீரங்கித் தாக்குதல் சுமார் மூன்று மணிநேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விமானப்படையின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மூன்று தடவைகளில் பத்து வரையான குண்டுகளை வீசின. இவற்றின் மத்தியில் உலங்குவானூர்தி ஒன்று வீதிகளை மையமாகக்கொண்டு தொடர்ச்சியான சுவிபர்த் தாக்குதல்களை நடாத்திய வண்ணமிருந்தது. நள்ளிரவு முதல் நண்பகல்வரை உலங்குவானூர்தி இப்பகுதிகளில் வட்டமிட்டவாறு ரோந்து சுற்றித் திரிந்ததை அவதானிக்கமுடிந்தது.

நேற்று அதிகாலை 5 45 மணியளவில் மூளாய், சித்தன்கேணி, சுளிபுரம் தொல்புரம், பண்டத்தரிப்பு பகுதிகளை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் திருவடிநிலை பகுதியில் அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. இதன்போது இவ்விரு விமானங்களிலிருந்தும் தாக்குதல் நிலைகளை நோக்கி மின் ஒளி பாய்ச்சப்பட்டது. இதனைத் தொடர்ந்து மீண்டும் 6-30 மணிக்கு அந்த குண்டு வீச்சு

[6ஆம் பக்கம் பார்க்க]

# எறிகணை வீச்சினால் எட்டுப்பேர் படுகாயம்

(நமது நிருபர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் வாழ்விடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அகோர எறிகணைத் தாக்குதல்களினால் எட்டுப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர். சில வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக்காலை 6.00 மணி முதல் பலாலி இராணுவ முகாமிலிருந்து பண்டத்தரிப்பு, சமிளானை, இல்லாலை, சுளிபுரம், பொன்னாலை, வழக்கம்பரை, மூளாய் மற்றும் துணைவி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் எறிகணைத் தாக்குதலினால் இப்பகுதிகள் பல மணிநேரம் அதிர்ந்தது. மக்கள் இப்பகுதியிலிருந்து பாதுகாப்பான இடம்நோக்கிச் சென்றனர்.

பண்டத்தரிப்பு முள்ளையடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் ஜே. அன்னம்மா (வயது 72) இ. கல்யாணி (வயது 11) இவரது சகோதரி காஞ்சனா (வயது 10) ஆகியோர் படுகாயமடைந்ததுடன் ஆ. சிவதாசன் (வயது 11) என்பவரும் காயமடைந்தார்.

தொடர்ந்து ஏவப்பட்ட எறிகணைகளினால் வட்டுக்கோட்டையை சேர்ந்த சுந்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டமனாறு பகுதியில் விமானக்குண்டு வீச்சு

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதியில் நேற்று பகல் குண்டு வீச்சு விமானம் ஒன்று இரண்டு தடவைகள் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசியது.

பகல் 11-15 மணியளவில் வந்த குண்டு வீச்சு விமானம் முதலில் ஒரு குண்டை வீசியது. பின்னர் மீண்டும் 12 மணிக்கு வந்த அந்த விமானம் மேலும் இரண்டு குண்டுகளை வீசியது. எனினும் குண்டுகள் வெடிக்கவில்லையெனத் தெரியவருகிறது.

தொண்டமனாறு பிள்ளையார் கோவிலடியைநோக்கியே

[6ஆம் பக்கம் பார்க்க]

# இராணுவ நடவடிக்கையால் 5000 பேர் வெளியேற்றம்

(நமது நிருபர்)

சிறிலங்கா முப்படைகளினதும் அகோர தாக்குதல்களுக்கு அஞ்சி வலி மேற்கு பகுதியிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சிறிலங்காப்படையினரின் இத் தாக்குதல்களுக்கு அஞ்சி சுளிபுரம், நாத்தடி, குடாக்கனை, கல்லடி வேம்பு, பண்ணாகம், பறளாய், சம்பனை, தலையாட்டி பகுதிகளிலிருந்து 5000 இற்கு மேற்பட்ட மக்கள் வெளியேறி அகதிகளாக தொல்புரம், மூட்டுச்சந்தையடி, மத்தியசனசமூக நிலையக் கட்டடம், துரையன்வளவு, பிள்ளையார் கோவிலடி, பத்தாளைக் கேணியடி, வட்டுக்கோட்டை, வழக்கம்பரை அம்மன் கோவிலடி பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

செஞ்சிலுவை உதவி:

சிறிலங்கா படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி மக்கள் சிதறி ஓடிய போது பலர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இவ்வாறு காயமடைந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# மல்லாகத்தில் எறிகணை வீச்சு ஒரு பெண் பலி; ஒருவர் காயம்

## 500 குடும்பங்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் குளமங்கால் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலினால் ஒரு பெண் மரணமானார். மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் இப்பகுதியை நோக்கி சுமார் 15 எறிகணைகள் ஏவப்பட்டதாகவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் எறிகணை வீச்சு இடம்பெற்றுக் கொண்டிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப் படைகள் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை 6-00 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை இவ் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 440 மைல் தூரத்தில் வைத்து கிட்டு வந்தகப்பல் பிடிபட்டது

(சென்னை)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டு) இந்தியக் கடற்படையினர் கைதுசெய்யவில்லை எனவும் கப்பலில் தங்கியிருந்த விடுதலைப்புலிகள் கப்பலுக்குத் தீவைக்குமுன்னரே கிட்டு சயனைட் அருந்திவிட்டாரெனவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கட்டிச் செல்லப்பட்ட கப்பலிலிருந்த கிட்டுவையும் மற்றும் போராளிகளையும் விடுவிக்குமாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன்

[6ஆம் பக்கம் பார்க்க]

# நாசகாரச் சிறை எதுவும் எம்மிடம் இல்லை

## புலிகளின் லண்டன்கிளை அறிக்கை

(லண்டன்)

விடுதலைப் புலிகள் வடகிழக்குப் பகுதிகளில் பரந்த அளவில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்ற பெயரில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

மேலும் பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்ற பெயரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல நாசகாரச் சிறைச்சாலை எதுவும் எம்மிடம் இல்லை எனவும்

[6ஆம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புநிதி சேகரிப்பு இன்று யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4-30 மணிவரை யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

மேலும் நாளை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.00 மணிவரை கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 5-30 மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் மீட்புநிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளதாக தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சோ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## இந்துக் கோவில் சேதம்

நேற்று கடற் படையினர் நடாத்திய தாக்குதலினால் சில்லாலையில் உள்ள இந்துக் கோவிலொன்று பலத்த சேதம் அடைந்தது.

## வரி விளம்பரம்

**எம். ஜி. ஆர். திருமண சேவை**

அரச தொழிலை எதிர்பாராது சாதகம் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வே. புண்ணியமூர்த்தி அனுமதி இலக்கம் 2518 புத்தூர் சந்தி, மீசாலை. (3380)

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஸ்ரீமுக புதுவருட (1993-1994) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விலை ரூபா 65.00 வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3381)

**பாடல் பதிவு**

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண்றெக்கோடிங் விபாட்பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில் நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (4066)

**LOTUS - 1, 2, 3**
**2 MONTHS**

**புதிய பிரிவு**

ஆரம்பம்:
**27-02-1993**

★ கட்டணம் தவணை முறையில்

**தமிழ் SHORT HAND & TYPING**

ஆரம்பம்:
**01-03-1993**

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET
JAFFNA.
(சி 6076)

யாழ் பல்கலைக்கழகம்

## யாழ். பல்கலைக்கழக ஆய்வுநூல்களின் விற்பனை

யாழ். பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளைப் பிரசுரங்களாக வெளியிட்டு அவற்றை விற்பனை செய்து வருகின்றது. இதனடிப்படையில் பின்வரும் வெளியீடு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் விற்பனைக்குள்ளது.

1. அரசியல் தொடர்புகளும் தேர்தல் நடைமுறைகளும் (Political communication and the Electoral Process) கலாநிதி எஸ். கே. எஸ். நாதன்

பிரதி ஒன்று ரூபா 35/- சாதாரண தபால் செலவு ரூபா 4/- இதனை தபாற்கட்டளை/காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சாதாரண தபால்செலவை மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

தபாற்கட்டளை/காசுக்கட்டளை நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி-6072)

## பதவி வெற்றிடங்கள்

1. ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் ஆடைகள் தைப்பதற்கும்.
2. பாடசாலை மாணவர்களுக்குரிய பாக்குகள் தைப்பதற்கும் ஆட்கள் தேவை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் சுய விபரங்களுடனும்

01. 03. 93 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு

நேரில் வரவும். அன்றேல் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 184
ஈழநாதம்,
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6073)

## கவிதை அரங்கு

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை 25-02-1993 வியாழக்கிழமை பிற்பகல் 4.15 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் "நமக்குத் தொழில் கவிதை" எனும் தலைப்பில் கவியரங்கு நடைபெறவுள்ளது.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இக்கவியரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கவிஞர் சோ. பத்மநாதன் கவிஞர் எஸ். சிவலிங்கராஜா கவிஞர் என். சண்முகலிங்கன் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ... பிள்ளை ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பதவி வெற்றிடம்**

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண்களிடமிருந்து மட்டும் 1993-03-20ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:- தொழிலாளி தரம் III (ஆண்) - நிரந்தரப் பதவி

சம்பளத்திட்டம்:- ரூபா 1375-3x30 1465/- மாதமொன்றுக்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படி உட்பட ஏனைய படிகளும் 15% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.)

தகைமைகள்:- 1. ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2 வயது 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:- பொதுவுளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/- தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதுமான ...

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு திகதி மாற்றம்

கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டு கழக ஆதரவில்

**19-2-93 அன்று**

நடாத்தப்பட இருந்த

**அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு**

**13-3-93 சனிக்கிழமை மாலை**

மல்லாகம்
சிறிபாஸ்கரன் விளையாட்டரங்கில்
நடைபெறுமென்பதை தன்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

(சி-6077)

கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுகழகம்

## காணவில்லை

வ. இரத்தினவேல் சின்னப்பு வயது 40 மெலிந்த தோற்றமும் உயரமுமானவர். நொத்தாரிஸ் வேலைசெய்வதற்காக கிளிநொச்சி சென்றவர். இவருடன் சிவனேசன் என்பவரும் (வயது 15) சென்றிருந்தார். 4 மாதமாகியும் எந்த விதத் தகவலும் இல்லை. இவருடைய மனைவி, பிள்ளைகள் தேடுகிறார்கள். இவர்களைக் கண்டவர்கள் செ. கனகரெத்தினம் சோடாக் கொம்பனி லேன், "ராஜகிரிசா" மல்லாகம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:-
கனகு

(4332)

## 3-ம் மாத நினைவுக்கீறல்கள்

கப்டன் மலரவன் (லியோ)

(காசிலிங்கம் விஜிந்தன்)

"அறிவும் திறமையும்தான் எனது ஆத்மாவை கணந்தோறும் இயக்குகின்றன"

— மலரவன்

முத்திங்கள் போனதையா - நீ
முத்தமிட்டு தமிழ் மண்ணை
எத்தனை தான் தேற்றினாலும்
பித்தரைப் போலாகி விட்டோம்

சோர்ந்திட்ட சோதரரின் உணர்வுகளை
சுர்த்திங்கு கொண்டுவந்து - நின்சிரிப்பால்
களிப்பூட்ட வந்திடுவாய் - எமக்குத்
தெளிவை நீ தந்திடுவாய்

— மலரன்னை

(4333)

## நினைவு கூருகின்றோம்..

**1993-02-24**

1984 ஆம் ஆண்டு இத்தினத்தில் யாழ். குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா ...

## பதவி வெற்றிடங்கள்

பெற்றிட இன்றே வாருங்கள்
ஷண்றெக்கோடின் விபோட்
பஸ்நிலைய வயிரவர் கோவில்
அருகாமையில் நவீன சந்தை
உட்புறம் யாழ்ப்பாணம்.
(4066)

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரி
கள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்
டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(இ-6072)

மனைவி, பிள்ளைகள் சேர்ந்து ...ர்கள். இவர்களைக்கண்
டவர்கள் செ. ...திரம் சோடாக் கொம்பனி
லேன், "ராஜநிலா" வைகாசக் என்ற முகவரியில்
தொடர்பு கொள்ளவும்.

(4332)

தகவல்:-
கனகு

---

LOTUS - 1, 2, 3
**2 MONTHS**

**புதிய பிரிவு**

ஆரம்பம்:
**27-02-1993**

★ கட்டணம்
தவணை முறையில்

தமிழ் SHORT HAND
& TYPING

ஆரம்பம்:
**01-03-1993**

SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
(Pioneers in Computer
Education)
16, 3rd CROSS STREET
JAFFNA.

(இ 6076)

---

## பதவி வெற்றிடங்கள்

1 ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் ஆடைகள் தைப்பதற்கும்.

2. பாடசாலை மாணவர்களுக்குரிய பாக்குகள் தைப்பதற்கும் ஆட்கள் தேவை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும்
சுய விபரங்களுடனும்

01. 03. 93 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
நேரில் வரவும். அல்லது பின்வரும் விலாசத்திற்கு
விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 184
ஈழநாதம்,
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-6073)

---

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண்களிடமிருந்து மட்டும் 1993-03-20ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:- தொழிலாளி தரம் 111 (ஆண்) - நிரந்தரப் பதவி

சம்பளத்திட்டம்:- ரூபா 137 -3x30 1465/- மாதமொன்றுக்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் 15% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.)

தகைமைகள்:- 1. ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2 வயது 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:- போட்டிப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/- தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடம், கைதடியிலுள்ள சித்த மருத்துவத்துறை, மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைத்துறை ஆகிய அலுவலகங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 02-22 (இ/6074)

---

## 3-ம் மாத நினைவுக்கீறல்கள்

### கப்டன் மலரவன் (லியோ)

(காசிலிங்கம் விஜிந்தன்)

"அறிவும் திறமையும்தான் எனது ஆத்மாவை கணந்தோறும் இயக்குகின்றன"
— மலரவன்

முத்திங்கள் போனதையா - நீ
முத்தமிட்டு தமிழ் மண்ணை
எத்தனை தான் தேற்றினாலும்
பித்தரைப் போலாகி விட்டோம்

சோர்ந்திட்ட சோதரரின் உணர்வுகளை
ஈர்த்திங்கு கொண்டுவந்து - நின்சிரிப்பால்
களிப்பூட்ட வந்திடுவாய் - எமக்குத்
தெளிவை நீ தந்திடுவாய்

– மலரன்னை

(4333)

---

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. தன்னியக்க பிளேட்டின் இயக்குநர்
Automatic Platen Machine Minder
2. தன்னியக்கமற்ற பிளேட்டன் இயக்குநர்
Semi Automatic Platen Machine Minder
3. தன்னியக்க சிலிண்டர் இயக்குநர்
Automatic Cylinder Machine Minder
4. தன்னியக்கமற்ற சிலிண்டர் இயக்குநர்
Semi Automatic Cylinder Machine Minder
5. வெட்டு இயந்திர அனுபவத்துடன் கூடிய புத்தகம் கட்டுபவர்கள் (Binders)
6. இலக்கமிடுதல், கோர்த்துக்கட்டுதல் (Binders) முதலிய வேலைகளில் அனுபவமுள்ளோர்
7. அச்சுக்கோப்பாளர்கள்

தகுதியுடையோர் அனுபவச்சான்றுகளுடனும் சுயவிபரங்களுடனும் 28-02-93 ஞாயிறு காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்

81, மகேந்திராவீதி,
யாழ்ப்பாணம். (இ)

**பொது முகாமையாளர்**
ஈழநாதம்

---

## நினைவு கூருகின்றோம்..
## 1993-02-24

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்.குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி.

1986 ஆம் ஆண்டு மன்னார் - தலைமன்னார் ரோட்டில், செல்-கம்ஸ் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் மீது சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2½ வயதுப் பெண் குழந்தை.

1989 ஆம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழ் இளைஞர்கள்.

கிளிநொச்சி - கணேசபுரம் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு மட்டு-மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

நிக்சன் மாஸ்ரர் (மகிழவெட்டுவான்-மட்டு)

நேசன் (ஆரையம்பதி-மட்டு)

கண்ணதாசன் (மகிழடித்தீவு-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/6071)

யாழ்ப்பாணம்

ஊர்காவற்றுறை தபால் நிலைய பெயரால்

# பெருமளவு மணிஓடர்கள் மோசடி கொழும்பில் கண்டு பிடிக்கப்பட்டது

(கொழும்பு)

காவலூர் தபாற்கந்தோர் பெயரில் கொழும்பில் நடந்த மணிஓடர் மோசடி புறக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஊர்காவற்றுறை தபாற்கந்தோரின் பெயரையும் அரசின் முத்திரையையும் பாவித்து ஊர்காவற்றுறை தபாற்கந்தோரினால் கொழும்பிலுள்ள பல்வேறு தபாற்கந்தோர்களிலும் மாற்றி பணம் பெறக்கூடியதாக காசுக்கட்டளைகளை தயாரித்த ஒருவர் அதன் 'அட்வைஸ்' பிரதிகளையும் கூடவே எடுத்துச் சென்றிருக்கிறார்.

இவர் கொழும்பிலுள்ள பல தபாற்கந்தோர்களுக்குச்சென்று போக்குவரத்து சிரமமில்லாததால் 'அட்வைஸ்' பிரதிகளையும் கூடவேஎடுத்து வந்துள்ளதாக கூறி தபாற்கந்தோரில் இரண்டையும் கொடுத்து காசை மாற்றி இருக்கிறார். தபாற்கந்தோர் அதிபர்களும் நாட்டு நிலைமைகாரணமாக இதனை நம்பி மாற்றிக் கொடுத்துள்ளனர்.

மேற்படி நபர் புறக்கோட்டை தபால் நிலையத்துக்கு இரண்டாவது முறையாக சென்று இப்படியானதொரு மணிஓடரை மாற்ற முனைந்த சமயம் தபாற்கந்தோர் அதிபர் இவர் மீது சந்தேகம் கொண்டார். எனவே இவரை அழைத்து விசாரித்தார். ஒரே மாதத்தில் வழங்கப்பட்ட இரண்டு மணிஓடர்களை வெவ்வேறு நாட்களில் மாற்றியமை சந்தேகத்தை கொடுத்தது எனவே தலைமையகத்துடன் தொடர்பு கொண்டார். அப்போது குட்டு அம்பலத்துக்கு வந்தது.

ஊர்காவற்றுறையிலுள்ள அரசாங்க அதிகாரி ஒருவரின் பெயரை பணம் வழங்குனராகவும் சம்பந்தப்பட்ட நபரின் பெயர் பெறுநராகவும் கொண்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியான மணியோடர்கள் பல கொழும்பில் இவ்வாறு மாற்றப்பட்டிருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இதைத்தொடர்ந்து ஊர்காவற்றுறை தபாற்கந்தோரில் இருந்து வரும் மணியோடர்கள் எதையும் மாற்றிக் கொடுக்க வேண்டாமென தபாற்கந்தோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மலையகத்திற்கென புதிய காணிக்கொள்கை வேண்டும்

## - மலையக மக்கள்முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

மலையகத்தில் இந்திய வம்சாவளியினரான பெருந்தோட்ட தொழிலாளரின் நலனைப் பேணும் வகையில் புதிய காணிக்கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் முன்னணி மேலும் கூறியிருப்பதாவது; மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களில் தொண்ணூறு சதவிகிதமானோர் காணியற்றவர்கள். இலங்கையின் ஏனைய இன மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் குறைந்தது ஒரு வீட்டை அமைக்கவாவது காணியைப் பெற்றுள்ளனர். ஆனால்மலையக மக்களைப் பொறுத்தவரையில் குறைந்தது ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளத்தானும் அவர்களுக்கு நிலம் இல்லை.

# மாடு திருடி விருதலையானவர் சைக்கிள் திருடி அகப்பட்டார்

[சுன்னாகம்]

மல்லாகத்தில். கடந்த வாரம் சைக்கிள் திருட முயன்ற ஒருவர் கையும் மெய்யுமாக அகப்பட்டார். இவர் பொதுமக்களால்காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட போது, இவர் ஏற்கனவே சென்ற வருடம் மாடு ஒன்றைத் திருடிய குற்றத்திற்காக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் குற்றப்பணம் செலுத்தி விடுதலையானவர் என்பது தெரியவந்தது ஏற்கனவே இது போன்ற சைக்கிள் திருட்டுக்களிலும் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட இவரிடமிருந்து இரண்டு சைக்கிள்களும் சுன்னாகக் காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. [11]

# மலேரிய தடுப்பு வேலைகள் வன்னியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மலேரிய தடுப்பு உத்தியோகஸ்தர் பற்றாக்குறையாக உள்ளதாக மலேரிய தடுப்பு பிரிவினர் கவலை தெரிவித்தனர்.

முன்னர் இப்பகுதியில் சேவை செய்தவர்களில் பலர் ஓய்வுபெற்று சென்றதாகவும், இந்த வெற்றிடங்கள் இன்று வரை நிரப்பப்படவில்லை என்றும், இதனால் அந்த மாவட்டங்களில் மலேரிய தடுப்பு நடவடிக்கை பெரும் பாதிப்பு அடைந்துள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

# பயிற்சி வகுப்புகள்

தொண்டர் சுகாதாரப் பயிற்சி வகுப்புகள் யாழ். சென்ஜேம்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் யாழ் மாநகர சுகாதாரப்பகுதியினரால் 16-2-93ல் இருந்து நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி வகுப்புகளில் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட 2ம், 3ம், 4ம், 5ம் வட்டாரங்களை உள்ளடக்கிய இளைஞர், யுவதிகள் கலந்து கொள்கின்றார்கள். இப்பயிற்சி வகுப்புகளில் அவ்வத்துறைகளில் அனுபவம் பெற்றவர்களால் விரிவுரைகள் வழங்கப்படுவதாகவும், இப்பயிற்சி வகுப்புக்கள் பூர்த்தியானதும் இப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு பரீட்சை ஒன்று யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்படவுள்ளதாகவும் சித்திபெறுவோ

# ஆசிரிய ஆலோசகர் நியமனத்திற்கு பரீட்சை

...திதாக நியமனம் பெறும் ... டிப்ளோமா பட்டதாரி

# பொலிசார் சித்திரவதை செய்தே வாக்குமூலம் பெற்றனர்

## ரஞ்சன் கொலை வழக்கில் எதிரி தெரிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்காப் பொலிசார் என் உடலில் சிகரட்டினால் சுட்டு பல வகைகளிலும் என்னைச் சித்திரவதை செய்ததுடன் கொலை செய்யப் போவதாக மிரட்டி பலவந்தமாக என்னிடம் சில கடிதங்களில் கையெழுத்து வாங்கினர் என ரஞ்சன் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சுரேந்திரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலை வழக்கு கடந்த 10ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எப். என். டி.ஜயசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது எதிரியான அருணாசலம் சுரேந்திரன் என்ற சாஹிர் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ் வி. ரணசிங்க சாட்சியமளிக்கையில் குற்றத்தடுப்பு பிரிவின் சார்ஜன்ட் கருணாசிறி 1991 அக்டோபர் 17ஆம் திகதி எதிரியை என்னிடம் அழைத்து வந்து எதிரி சுயேட்சையாக வாக்குமூலம் ஒன்றை வழங்க விருப்பம் தெரிவித்திருப்பதாக கூறினார்.

நான் எதிரியுடன் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசினேன். எதிரிக்கு இருமொழிகளும் புரியவில்லை. பின்பு ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர் விக்ரமராஜாவை எனது அலுவலகத்திற்கு வரவழைத்து எதிரியின் வாக்குமூலத்தைத் தமிழிலிருந்து சிங்களம் மற்றும் ஆங்கிலமொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்து சிங்கள மொழியில் குறிப்பு எழுதினேன்.

எதிரி நல்ல முறையில் காணப்பட்டார். நல்ல மானசீக ஆரோக்கிய நிலையிலும் இருந்தார். எதிரியின் உடலில் எதுவித காயங்களும் காணப்படவில்லை உள் காயங்கள் இருந்தனவா என்பதை நான் அவதானிக்கவில்லை என்றார்.

இவ் ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்கு ஆவணமாக நீதிமன்றத்தில் பதிவு செய்ய அரச சட்டவாதி பாலித்த பர்ணாந்து அனுமதி கோரினார். எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே சப சார்க்ஸ் எதிரியிடமிருந்து மேற்படி வாக்குமூலம் சுயேட்சையாக பெறப்படவில்லையென்று தெரிவித்து அதை வழக்கு தொடர்பாக மன்றில் பதிவாவதை ஆட்சேபித்தார்.

இதனைத் தொடர்ந்துமேற்படி ஒப்புதல் வாக்கு மூலம் எதிரி சுயேட்சையாக வழங்கியுள்ளாரா என்பதை அறிய 'வொயர்டயர்' என்ற மேலதிக விசாரணையை நடத்தும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து 'வொயர்டயர்' விசாரணை ஆரம்பமானது. அங்கு எதிரியான அருணாசலம் சுரேந்திரா சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். அவர் அங்கு கூறியதாவது, பொலிசார்என்னை உவெலட்ட செய்யாவில் வைத்து கைது செய்தனர். பின் என் இருகைகளும் கட்டப்பட்டு இருட்டு அறை ஒன்றில் போட்டு என்னைத்தாக்கினர். பல வகையான சித்திரவதைகள் செய்த பொலிசார் எனது முதுகிலும் காலிலும் சிகரட்டினால் சுட்டனர் நான் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பலவகையான இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டேன். பலவந்தமான முறையில் என்னிடம் சில கடிதங்களில் கையெழுத்து வாங்கினர்.

நான் ஒருபோதும் இந்த சாட்சியமளித்த ஏ. எஸ் பி. யிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. இன்ஸ்பெக்டர் நிசாப்தீன் மற்றும் ரணசிங்க உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்னைக் கொலை செய்யப் போவதாக மிரட்டி, தாக்கிய பின்பு இரண்டு தருணத்தில் எனது கையொப்பங்களைப் பெற்றனர்.

சுயேட்சையான முறையில் நான் ஒருபோதும் பொலிசாருக்கு வாக்குமூலம் வழங்கவில்லை என்றார்.

வழக்கு விசாரணை எதிர் வரும் 25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# சர்வசன வாக்கெடுப்பின் மூலமே ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது

## முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.பேச்சு

(கொழும்பு)

சிறிலங்காவில் இப்போதும் ஜனநாயகம் நிலவுவதற்கு அடிப்படைக்காரணம் 1982 இல் சர்வசன வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டதேயாகும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அகில இலங்கை சோனக சங்கத்தின் எழுபத்தேழாவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; இன்றும் ஜனநாயகம் நிலவுவதற்கு காரணமான ...

...டார். அத்துடன் 1982 இல் மேற்கொள்ளப்பட்ட அம்முடிவை எவரும் சுலபமாக விமர்சிக்கலாம் ஆனால் 1982இல் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணியினர் ஆற்றிய உரைகளைக் கவனத்திற் கொண்டு ஜனநாயகத்தை காப்பாற்ற இயலுமான ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இம்முடிவை மேற்கொண்டதன் மூலம் 1982இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு மேலும் பலம் சேர்க்கப்பட்டதுடன் அரசியல் உறுதிப்பாடு நிலவவும் வகைசெய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு நகரில் பொலிசார் வீடுவீடாக விபரம் சேகரிப்பு

மட்டக்களப்பு நகரில் பொலிசார் வீடு வீடாகச் சென்று குடியிருப்பாளர் தொடர் ...

...யும் பதிவு செய்கின்றனர்.

மட்டு நகரிலுள்ள வீடுகளுக்கு புதிதாக எவரும் தங்கு ...

தோட்ட தொழிலாளரின் நலனைப் பேணும் வகையில் புதிய காணிக்கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் முன்னணி மேலும் கூறியிருப்பதாவது; மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஏனைய இன மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் குறைந்தது ஒரு வீட்டை அமைக்கவாவது காணியைப் பெற்றுள்ளனர். ஆனால் மலையக மக்களைப் பொறுத்தவரையில் குறைந்தது ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளத் தானும் அவர்களுக்கு நிலம் இல்லை.

## மாடு திருடி விடுதலையானவர் சைக்கிள் திருடி அகப்பட்டார்

[சுன்னாகம்]

மல்லாகத்தில் கடந்த வாரம் சைக்கிள் திருட முயன்ற ஒருவர் கையும் மெய்யுமாக அகப்பட்டார். இவர் பொதுமக்களால் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட போது, இவர் ஏற்கனவே சென்ற வருடம் மாடு ஒன்றைத் திருடிய குற்றத்திற்காக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் குற்றப்பணம் செலுத்தி விடுதலையானவர் என்பது தெரியவந்தது ஏற்கனவே இது போன்ற சைக்கிள் திருட்டுக்களிலும் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட இவரிடமிருந்து இரண்டு சைக்கிள்களும் சுன்னாகம் காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. [11]

## மலேரிய தடுப்பு வேலைகள் வன்னியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மலேரிய தடுப்பு உத்தியோகஸ்தர் பற்றாக்குறையாக உள்ளதாக மலேரிய தடுப்பு பிரிவினர் கவலை தெரிவித்தனர்.

முன்னர் இப்பகுதியில் சேவை செய்தவர்களில் பலர் ஓய்வுபெற்று சென்றதாகவும், இந்த வெற்றிடங்கள் இன்று வரை நிரப்பப்படவில்லை என்றும், இதனால் அந்த மாவட்டங்களில் மலேரிய தடுப்பு நடவடிக்கை பெரும் பாதிப்பு அடைந்துள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரிய ஆலோசகர் நியமனத்திற்கு பரீட்சை

புதிதாக நியமனம் பெறும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் எழுத்துப் பரீட்சையிலும் அதனைத் தொடர்ந்து நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்தாலேயே அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கடித இல (மா. / மா. தி / எஸ்.ஓ. சீ. / 15 2) இலக்கமுடையதும் 6.1 93 திகதியிடப்பட்டதுமான சகல கோட்ட மாவட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

அதேசமயம் 22 03 1991 க்கு முன் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டு கடமை புரிபவர்களுக்கு முறையான நியமனம் வழங்கப்படும் எனவும் இவர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி / வரலாறு சமயம், ஆங்கிலம், விவசாயம், மனைப் பொருளியல், வர்த்தகம், தொழில் நுட்பத்திறன், சித்திரம், சங்கீதம், நடனம், ஆரம்பக்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் ஆகியதுறைகளுக்கு கோட்ட மட்டத்தில் சேவைக்கால ஆசிரிய விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவமுள்ள டிப்ளோமா பட்டதாரி அல்லது பத்து வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறவேண்டும்.

இவர்களுக்கு எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன வைக்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஆசிரிய ஆலோசகர்களின் பெயர் விபரங்கள் கல்வி உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். இவர்களுக்கு விசேட கொடுப்பனவாக ரூபா 500/- வழங்கப்படுவதுடன் இவர்களால் நடாத்தப்படும் சேவைக்கால பயிற்சி வகுப்புகளுக்கு நாளொன்றுக்கு ரூபா 90/- வழங்கப்படும்

இவர்கள் புதன்கிழமைகளில் தமது கோட்ட மாவட்ட அதிகாரிகளுக்கு தவறாது சமூகமளித்து தமது செயற்திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதுடன் இவர்களது சம்பளம் உரிய கோட்டக் கல்வி அலுவலகத்தால் வழங்கப்படும் என்பதுடன் இவர்களது தாபன விடயங்களும் உரிய கோட்டக் கல்வி அலுவலர்களினாலேயே கவனிக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (17)

அரசாங்க அதிகாரி ஒருவரின் பெயரை பணம் வழங்குனராகவும் சம்பந்தப்பட்ட நபரின் பெயர் பெறுநராகவும் கொண்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியான மணியோடர்கள் பல கொழும்பில் இவ்வாறு மாற்றப்பட்டிருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இதைத்தொடர்ந்து ஊர்காவற்றுறை தபாற் கந்தோரில் இருந்து வரும் மணியோடர்கள் எதையும் மாற்றிக் கொடுக்க வேண்டாமென தபாற்கந்தோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்புகள்

தொண்டர் சுகாதாரப் பயிற்சி வகுப்புகள் யாழ். சென்ஜேம்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் யாழ் மாநகர சுகாதாரப்பகுதியினரால் 16-2-93ல் இருந்து நடாத்தப்பட்டு வருகின்றது

இப்பயிற்சி வகுப்புகளில் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட 2ம், 3ம், 4ம், 5ம் வட்டாரங்களை உள்ளடக்கிய இளைஞர், யுவதிகள் கலந்து கொள்கின்றார்கள். இப்பயிற்சி வகுப்புகளில் அவ்வத்துறைகளில் அனுபவம் பெற்றவர்களால் விரிவுரைகள் வழங்கப்படுவதாகவும், இப்பயிற்சி வகுப்புகள் பூர்த்தியானதும் இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு பரீட்சை ஒன்று யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்படவுள்ளதாகவும் சித்திபெறுவோருக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ் மாநகர சுகாதாரப் பகுதி தெரிவித்துள்ளது. (17)

### சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது

தை 1993 தொடக்கம் புதிய அரசுசேவைத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்ச்சி யாழ் கல்வித் திணைக்களத்திலும் ஏனைய கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான சம்பளம் நேற்றைய தினம் வழங்கப்பட்டது. இதேசமயம் யாழ் பிரதேச ஆசிரியர்களுக்குரிய அதிகரித்த சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சம்பள மாற்றியமைப்புக் கடிதங்களை தயாரிக்கும் வேலைகள் சகல கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதேநேரம் இம்மாத ஆசிரியர் சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதி இதுவரை யாழ் கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. [17]

கைது செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ் வி. ரணசிங்க சாட்சியமளிக்கையில் குற்றத்தடுப்பு பிரிவின் சார்ஜன்ட் கருணாசிறி 1991 அக்டோபர் 17ஆம் திகதி எதிரியை என்னிடம் அழைத்து வந்து எதிரி சுயேட்சையாக வாக்குமூலம் ஒன்றை வழங்க விருப்பம் தெரிவித்திருப்பதாக கூறினார்.

நான் எதிரியுடன் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசி...

...னார். எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே சபா ... சார்ல்ஸ் எதிரியிடமிருந்து மேற்படி வாக்குமூலம் சுயேட்சையாக பெறப்படவில்லையென்று தெரிவித்து அதை வழக்கு தொடர்பாக மன்றில் பதிவாவதை ஆட்சேபித்தார்.

இதனைத் தொடர்ந்துமேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எதிரி சுயேட்சையாக வழங்கியுள்ளாரா என்பதை அறிய 'வொயர்டயர்' என்ற மேலதிக விசாரணையை நடாத்தும் படி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

...விடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. இன்ஸ்பெக்டர் நிஹாப்தீன் மற்றும் ரணசிங்க உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்னைக் கொலை செய்யப்போவதாக மிரட்டி, தாக்கிய பின்பு இரண்டு தருணத்தில் எனது கையொப்பங்களைப் பெற்றனர்.

சுயேட்சையான முறையில் நான் ஒருபோதும் பொலிசாருக்கு வாக்குமூலம் வழங்கவில்லை என்றார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# சர்வசன வாக்கெடுப்பின் மூலமே ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது

## முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.பேச்சு

(கொழும்பு)

சிறிலங்காவில் இப்போதும் ஜனநாயகம் நிலவுவதற்கு அடிப்படைக்காரணம் 1982 இல் சர்வசன வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டதேயாகும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அகில இலங்கை சேவை சங்கத்தின் எழுபத்தேழாவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; இன்றும் ஜனநாயகம் நிலைப்பதற்கு காரணமான சர்வசனவாக்கெடுப்பில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க உதவிய வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் 1982 இல் மேற்கொள்ளப்பட்ட அம்முடிவை எவரும் சுலபமாக விமர்சிக்கலாம் ஆனால் 1982இல் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணியினர் ஆற்றிய உரைகளை கவனத்திற் கொண்டு ஜனநாயகத்தை காப்பாற்ற இயலுமான ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இம்முடிவை மேற்கொண்டதன் மூலம் 1982இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு மேலும் பலம் சேர்க்கப்பட்டதுடன் அரசியல் உறுதிப்பாடு நிலவவும் வகைசெய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு நகரில் பொலிசார் வீடுவீடாக விபரம் சேகரிப்பு

மட்டக்களப்பு நகரில் பொலிசார் வீடு வீடாகச் சென்று குடியிருப்பாளர் தொடர்பான விபரங்களைத் திரட்டி வருகின்றனர். வீட்டில் குடியிருப்பவர்களையும், அங்குள்ள வாகனங்களின் இலக்கம், விபரம் என்பனவற்றையும் பதிவு செய்கின்றனர்.

மட்டு நகரிலுள்ள வீடுகளுக்கு புதிதாக எவரும் தங்குவதற்கு வந்தால் அதைப்பற்றியும், அவர்களின் உறவினர்கள் எங்கு வாழ்கின்றனர் என்பது பற்றியும் கேட்டறியப்படுகிறது.

## கூட்டணி அமைப்பதில் சுதந்திரக் கட்சி தீவிரம்

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட சுதந்திரக் கட்சி ஐந்து கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. வடக்கு -கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமானால் இக்கூட்டணி ஈ பி ஆர் எல்.எப இற்கு ஆதரவு அளிக்குமாம்.

இலங்கை கம்யூனிஸ்ற்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, நிகால் பெரேராவின் தேசிய தலை மக்கள் கட்சி சிறிலங்கா மக்கள் கட்சி (வை பி சில்வா) தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவையே அந்த ஐந்து கட்சிகளுமாகும்.

சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஆறு கட்சிகள் சேர்ந்து அமைக்கும் இந்த கூட்டு முன்னணி பொதுச்சின்னம் ஒன்றிலேயே மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் என தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை லலித்-காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் நவசமசமாஜக் கட்சியும் மாகாணசபைத்தேர்தலில் தனித்தே போட்டியிடும் எனத் தெரிய வருகிறது.

வடக்கு- கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமானால் இந்த கூட்டு முன்னணி ஈ பி.ஆர் எல் எவ் க்கு தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் மலையகத்தில் சந்திரசேகரனின் மலையக மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு பெறப்படும் என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கூட்டுமுன்னணி அமைக்கப்பட்டதும் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே தேர்தல் பிரசாரம் நடைபெறும் என்றார்.

### உடற்பயிற்சி போட்டியில் வெற்றி

கைதடிக் கோட்டத்தணி அமைப்பிலான பாடசாலைகளிற்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில்கலந்து கொண்ட கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த நான்கு அணிகளில் 15 வயதிற்குட்பட்ட பெண்கள் 17வயதிற்குட்பட்ட ஆண்கள் ஆகிய இரு அணிகளும் முதலாம் இடத்தையும் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

### கருத்தரங்கு

யாழ்பாண பல்கலைக்கழக புவியியல் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் ''இலங்கையை சிறப்புதாரணமாகக் கொண்ட விவாத நிலையும் அதன் பண்புகளும்'' என்னும் தலைப்பில் கலாநிதி சிரேஷ்ட விரிவுரையாளர். கா. குபாலன் உரையாற்றவுள்ளார். புவியியல்மன்றம் நடாத்தும் கருத்துரைத் தொடரில் இது ஐந்தாவதாகும்.

## வறிய மக்களுக்கு வீடமைப்புக் கடன்

''யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழும் வறிய மக்களுக்கு சென்றவருடம் வீடுகட்டுவதற்கு வழங்கியதுபோல இம்முறையும் ரூபா எண்ணாயிரத்து ஐந்நூறு (8500/- யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட உள்ளது. இவைகளை உரிய வறிய மக்களுக்கு சரியாக சென்று சேர்வதற்கு இப்பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள் தமது சரியான பங்களிப்பை வழங்க வேண்டும்'' என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண முகாமையாளர் திரு எஸ். முருகையன் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றும்போது; ''இம்முறை சென்ற வருடம் வழங்கியதைவிட அதிகமான ஏழை மக்களுக்கு இந் நிவாரணப் பணம் கிடைக்கவுள்ளது. இப் பணியை இந்த வருடம் ஆனி. ஆடி மாதங்களுக்குள் வழங்கி முடிக்கக் கூடியதாக சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் உண்மையான வறிய மக்களை தெரிவு செய்து வழங்குவதற்கு எம்முடன் பூரண பங்களிப்பைச் செய்ய வேண்டும். இந்த வேலையை குறித்த தவணையில் முடிக்காது போனால் இப்பணம் தென்னிலங்கைக்கு திரும்பிச் சென்றுவிடும். இவ் வறிய மக்களை சனசமூக நிலையங்களும், சமுதாயத்திலுள்ளவர்களுமே தெரிவு செய்து. இவர்களுடைய பெயர்ப்பட்டியல் மக்கள் பார்வைக்கு வெளியிடப்படும்'' என்றார். [17]

## வணிகநாதம் மலர்வெளியீடு

(கொழும்புத்துறை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ''வணிகநாதம்'' இரண்டாவது மலர் வெளியீடு நின்று புதன்கிழமை காலை 9 00 மணிக்கு கல்லூரியில் மேற்படி மன்றத் தலைவர் செல்வன் த. ஸ்ரீரேன் தலைமையில் நடைபெற உள்ளது.

வர்த்தகத் துறை சார்ந்த அறிஞர்களின் கட்டுரைகளை உள்ளடக்கியதாக இம் மலர் வெளிவருகிறது.

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு சி சிவராசா முதற் பிரதியை பெற்றுச் சிறப்பிக்கவுள்ளார்.

மருதனாமடக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (24)

## பொலிஸாரின் ஆயுதங்கள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது

மூதூர் பகுதியில் விடுதலைப்புலிகளைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் ஆறு ஒன்றைக் கடக்க படகு ஒன்றைப் பயன்படுத்திய போது படகு கவிழ்ந்ததால் இரண்டு ஏ.கே 47 ரக றைபிள்களையும் அதற்கான மகஸின் மற்றும் ரவைகளையும் தவறவிட்டதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

இதுபற்றி பொலிஸ் தலைமையம் விடுத்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, படகில் பொலிஸ் கோஷ்டி ஆற்றைக் கடக்கும் போது படகு சரிந்து ஆற்றுக்குள் விழுந்த கான்ஸ்டபிள் ஒருவர் சுழியில் அகப்பட்டுத் தத்தளித்த போது அவரது ஏ.கே. றைபிளையும் அதற்கான மகஸின் மற்றும் ரவைகளையும் இழந்தார். இந்த ஆயுதத்தை தேடும் முயற்சியில் ஏனைய பொலிசார் ஈடுபட்ட போது மற்றுமொரு பொலிஸ்கான்ஸ்டபிள் தனது ஆயுதம் ரவை மற்றும் மகஸின்களை தவறவிட்டார் என்று கூறப்பட்டிருக்கிறது.

### வன்னியில் விமான நடமாட்டம்

வன்னியின் பல பகுதிகளிலும் சிறிலங்கா விமானப் படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

குறிப்பாக முழங்காவில், மல்லாவி பூநரி ஊரியான். ஆனையிறவு போன்ற பகுதிகளை விமானப்படை விமானங்கள் நோட்டமிட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இரவு வேளைகளில் பரா வெளிச்சம் பாய்ச்சி விமானமொன்று நோட்டமிட்டதாகவும் தெரிய வருகிறது. [19

## கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட்போட்டி சனிக்கிழமை 27-ம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 42)

★

யாழ் மத்திய கல்லூரிக்கும் சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்தியகல்லூரி 10விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி மொத்தம் 149 ஓட்டங்களைப் பெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மொத்தம் 70 ஓட்டங்கள் முதலாவது இன்னிங்ஸிலும், இரண்டாவது இன்னிங்ஸில் 109 ஓட்டங்களையும் பெற்றது. இந்தப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர் எஸ். மணிவண்ணன் 14 விக்கெட்டுகளை கைப்பற்றி ஒரு சாதனையை நிலை நாட்டினார். (42)

★

யாழ் மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் 19 வயதிற்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டி 26-ம் திகதி வெள்ளிக்கிழமையும் 27-ம் திகதி சனிக்கிழமையும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.போட்டி வெள்ளிக்கிழமை 2 30 மணிக்கும் சனிக்கிழமை காலை 8 30 மணிக்கும் ஆரம்பமாகும்.

★

யாழ் இந்துக் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில 19 வயதுக்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட்போட்டி வெள்ளிக்கிழமை 26-ம் திகதியும், சனிக்கிழமை 27-ம் திகதியும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்

இரு கல்லூரிகளிலும் சிறந்த துடுப்பாட்டக்காரரும், சிறந்த பந்து வீச்சாளர்களும் இருப்பதால போட்டி விறுவிறுப்பாக அமையும்மென கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் பேசப்படுகிறது.

★

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ் கனகரட்ணம் ம. ம. விற்கும் இடையில் நடைபெற்ற 19 வயதிற் இடைப்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

ஸ்கோர் விபரம் சென் ஜோன்ஸ் 7 — 253, 7 — 65 கனகரட்ணம் ம. ம. வி.148, 174 இத்துடன் போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. (42)

# எலிக்கும் தவளைக்குமான உறவை ஒத்த அ.தி.மு.க.காங்கிரஸ் உறவு

**- கருணாநிதி தெரிவிப்பு**

கால்களைக் கட்டிக்கொண்டு தவளையும், எலியும் உறவுகொண்டுள்ளது போன்ற உறவுதான் அ இ அ. தி மு. க விற்கும் காங்கிரசிற்கும் இடையிலான உறவு என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு கருணாநிதி வர்ணித்துள்ளார்.

அண்மையில் திருமணவிழா வொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; எமது ஆட்சியில் பன்னிரண்டு கிலோ அரிசி முப்பது ரூபாய்க்கு வழங்கப்பட்டது. இப்போது அதேயளவு அரிசியை நாற்பத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவேதான் எங்களை நீங்கள் தோற்கடித்ததாக நான் கருதவில்லை. உங்களை நீங்களே தோற்கடித்துக் கொண்டீர்கள் என்பதை இந்த அரிசி விலையுயர்வுக்குப் பின்பாவது நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்றே நினைக்கிறேன். நம்ம வீட்டுப் பிள்ளைகள் ஆயிற்றே தவறு செய்தாலும் தமிழநாட்டு மக்களைத் தாங்கி விடும் பொறுப்பு தி மு க.விற்கு இருக்கிறது. அந்த உணர்வோடு செயற்படுகின்றோம்.

காங்கிரசும். அ இ அ. தி. மு க வும் ஒரே மேடையில் நின்று நாங்கள் ஆட்சியமைத்தால் மூன்று நாட்களில் விலைவாசியைக் குறைப்போம் என்றார்கள். ஆனால் விலைவாசி குறையவில்லை. ஏன் என்று கேட்டபோது நாங்கள் ஒன்றாக இருந்தால் சங்கடமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு கூட்டணியை உடைக்க வகை செய்கிறார்கள்.

ஆறு மந்திரிகள் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் காங்கிரசுடன் இனி ஒட்டோ, உறவோ இல்லை என்று அறிவிக்கின்றார்கள். ஆனால் அதன் பிறகும் காங்கிரஸ்காரர்கள் நீ உதைத்தால் நான் விடுவேனா என்றவாறாக அ. தி மு க வின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கின்றார்கள் கூட்டணி நீடிக்கிறது என்று காங்கிரஸ் அறிவிப்பு விடுகிறது. ஏனென்றால் அ. தி மு. க விடம் பதினொரு ஓட்டு இருக்கிறது. அதைவிட்டால் மத்திய ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டு, புதிய தேர்தல் வரும் என்று கருதுகிறார்கள். நாட்டு மக்கள் இவர்களது அரசியல் விளையாட்டில் பந்தாடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களை ஜெயலலிதா ஒருபுறமும், நரசிம்மராவ் மறுபுறமும் மாறி மாறி உதைக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

பத்மநாபா கொலைவழக்கு

## மரணமானோர் பெயர்கள் குற்றப்பத்திரத்தில் நீக்கம்

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்குத் தொடர்பாக விசாரணை நடாத்திவருகின்ற தமிழக விசேட புலனாய்வுப்பிரிவினர் அக்கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிவராசன் குண்டு சாந்தன் ஆகியோர் இறந்து விட்டமையால் கொலைக்குற்றப்பத்திரத்தில் இருந்து இவ்விருவரினது பெயர்களையும் நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## குடியரசு தலைவர் உரை பாரதீய ஜனதா புறக்கணிப்பு

